## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08–ஆம் நாள் புதன்கிழமை

I.A.No.69 of 2024 in O.S.No.24 of 2024

காயத்திரி ...மனுதாரர்/ வாதி

எதிராக

1. அன்பரசன்
2. பரிமளா
3. சிவப்பிரகாசம்
4. பிரகாஷ்
5. தமிழ்செல்வி
6. சுகுமார்
7. அமர்சிங்
8. ஸ்ரீ கைலாசநாத சுவாமி திருக்கோவில்
   அதன் நிர்வாக அதிகாரி ...எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

### வழக்கறிஞர்கள் முன்னிலை:

| | | |
|---|---|---|
| மனுதாரர்/ வாதிக்காக | : | திரு.M.S.ரபேல்ராஜ் |
| 1, 2, 3, 5, 7 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்காக | : | திரு.முருகையன் |
| 8 ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதிக்காக | : | திரு.N.பஞ்சாபகேசன் |
| 4, 6 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் | : | Exparte |

## **உத்தரவு**



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.08 16:44:07 +0530

வழக்கு சொத்து பேணுனர் நியமனம் செய்ய கோரி உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 40 விதி 1 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுவின் சுருக்கம்:</u>**

1.1) மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். மனுதாரர் குத்தகை சாகுபடி செய்து வந்த 8–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான மனுவில் கண்டுள்ள நிலங்களை 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் வஞ்சகக்கூட்டு சேர்ந்து சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து விட்டதால் 1 முதல் 8 எதிர்மனுதாரர்கள் பெயரில் சொத்து சுவாதீனம் மற்றும் பெந்தக கால ஆதாயம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு முடியும் வரை தாவா நிலங்களை சுவாதீனம் எடுத்து சாகுபடி செய்து நிகரகண்டு முதலை விற்று முதல்பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வழக்கு சொத்து பேணுனர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) தாவா சொத்துக்களும் இதர சொத்துக்களும் 8–ம் பிரதிவாதி கோவிலுக்கு சொந்தமானதாகும். வாதியின் மூதாதையர் மருதமுத்து வகையறா சாகுபடி செய்து வந்ததை பொறுத்து 25.03.1972–ம் தேதியில் மருதாம்பாளும், அவரது பேரன் ரெங்கசாமியும் அடையும்படி ஓர் பதிவு உயில் எழுதிவைத்து மருதமுத்து காலத்திற்கு பிறகு மருதாம்பாளும், ரெங்கசாமியும் சாகுபடி செய்து 8–ம் பிரதிவாதிக்கு குத்தகை கொடுத்து வந்தார்கள். தாவா நிலங்களில் குத்தகை உரிமையை வாதி அடையும்படி 12.02.2019 அன்று ஓர் பதிவு உயில் எழுதிவைக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு 2020ம் வருடம் ரெங்கசாமி தாவா சொத்துக்களை வாதிக்கும் 8–ம் பிரதிவாதிக்கு சொந்தமான இதர குத்தகை நிலங்களை பகுதி பகுதியாக


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.08 16:44:13 +0530

வாதியின் மகனுக்கும் அவருடைய மகன்களுக்கும் உள்குத்தகைக்கு கொடுத்து அவரவர் சாகுபடி செய்து வருகிறார்கள்.

1.3) வாதி தாவா நிலங்களை உடல் உழைப்பால் சாகுபடி செய்து வருகிறார். ரெங்கசாமி தாவா நிலங்களையும், இதர குத்தகை நிலங்களையும் உள்குத்தகைக்கு கொடுத்தது சம்மந்தமாக உள்குத்தகைதாரர் பெயரில் பதிவு செய்ய வேண்டும் என்று திருவையாறு வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அந்த மனுவில் தாவா நிலங்களை பொறுத்து வாதியின் பெயரை குத்தகைதாரராக பதிவு செய்து திருவையாறு வட்டாட்சியர் 16.12.2021-ம் தேதியில் உத்தரவு வழங்கியுள்ளார். மேற்படி உத்தரவிற்கு எதிராக செய்யப்பட்ட மேல்முறையீடு 08.02.2023 அன்று தஞ்சாவூர் வருவாய் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

1.4) வாதி தாவா நிலங்களில் 1433 பசலி நெல்சாகுபடி செய்துள்ளார். 1 முதல் 8 பிரதிவாதிகள் தாவா நிலங்களை அவர்களுக்கு உள்குத்தகைக்கு கொடுக்க வேண்டுமென்று கூறியதை வாதி மறுத்ததால் வாதியின் மீது விரோதமாக இருந்து வந்து கடந்த 07.01.2024 அன்று வாதி தனது உறவினர்களுடன் தாவா நிலங்களுக்கு சென்று அறுவடை செய்யும் நாள் பார்த்துக்கொண்டிருந்த போது 1 முதல் 7 பிரதிவாதிகள் 10 ஆட்களுடன் வந்து தங்களை அடித்துவிரட்டிவிட்டு தாவா நிலங்களை ஆக்கிரமித்து விட்டார்கள், இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் உரிமையியல் பிரச்சனை என புகாரை முடித்துவிட்டார்கள்.

1.5) 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் கிடையாது. வாதிதான் பயிரிடும் குத்தகைதாரர் ஆவார். வாதியின் பெயர் குத்தகைதாரராக திருவையாறு வட்டாட்சியரால் பதிவு செய்யப்பட்டதின் பெயரில் 8-ம் பிரதிவாதி செய்த மேல்முறையீடு தள்ளுபடி



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.08 16:44:20 +0530

செய்யப்பட்டு வாதியின் குத்தகை பாத்தியம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. தாவா நிலங்கள் சம்மந்தமாக வருட குத்தகையும், குத்தகை பாக்கியையும் செலுத்த தயாராக இருப்பதாகவும் எனவே தாவா நிலங்களை சுவாதீனம் எடுத்து சாகுபடி செய்து நிகரகண்டு முதலை விற்று நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வழக்கு சொத்து பேணுனர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **எதிருரை சுருக்கம்:**

1, 2, 3, 5, 7 எதிர்மனுதாரர்கள் வழக்குச் சொத்திறகு சட்டப்படியான பயிரிடும் குத்தகைதாரர்கள். அவர்கள் தாவா சொத்தை சாகுபடி செய்து குத்தகை அளந்து கோவிலுக்கு நேரடியாக செலுத்தி வருகிறார்கள். சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கில் வழக்கு சொத்து பேணுனர் நியமிக்க முடியாது. சொத்தின் சுவாதீனம் எதிர்மனுதாரர்கள் வசம் உள்ளதை மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். மனுதாரர் பயிரிடும் குத்தகைதாரர் அல்ல. 8-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை 1 முதல் 7 பிரதிவாதிகள் சாகுபடி செய்து குத்தகையை தவறாமல் செலுத்தி வரும் நிலையில் அசல் வழக்கானது தேவையின்றி தாக்கல் செய்து பிரதிவாதிகளுக்கு தொல்லைக் கொடுப்பதற்காக வழக்கு சொத்து பேணுனர் நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

4) தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்; சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வழக்கு விசாரணைக்காக ஒத்தி


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.08 16:44:27 +0530

வைக்கப்பட்டுள்ள வழக்கில் வழக்கு சொத்துப்பேணுநர் நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) **தீர்வு:**</u>

5.1) தாவா சொத்தின் சுவாதீனத்தை 1 முதல் 7 பிரதிவாதிகளிடமிருந்து மீட்டளிக்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 10.02.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தானது 8–ஆம் பிரதிவாதியான ஸ்ரீகைலாசநாதசுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி 8–ஆம் பிரதிவாதிக்கு வாதி குத்தகைதாரராக இருந்துள்ளார் என்றும், வாதியின் அனுபோகத்தில் இருந்து தாவா சொத்தை 1 முதல் 7 பிரதிவாதிகள் சட்டவிரோதமாக அபகரித்து விட்டார்கள் என்றும் எனவே தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்க 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் வழக்குரைக்கப்பட்டுள்ளது.

5.2) 1 முதல் 8 எதிர்மனுதாரர்களை பொருத்தவரை தாவா சொத்து 8–ஆம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தின் அனுபோகம் மனுதாரர் வசம் இல்லை என்றும், தாவா சொத்திற்கு மனுதாரர் உரிமையாளரோ, சுவாதீனதாரரோ இல்லாத போதும், சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மனுதாரர் கோருவது போல் வழக்கு சொத்துப்பேணுனர் நியமனம் செய்யக்கூடியதல்ல என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

5.3) கடந்த 07.01.2024 அன்று 1 முதல் 7 பிரதிவாதிகள் 8–ஆம் பிரதிவாதியின் ஆலோசனைப்படி சுமார் 10 அடியாக்களுடன் வந்து வாதியை அடித்து விரட்டி விட்டு தாவா நிலங்களை ஆக்கிரமித்து விட்டார்கள்


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.08 16:44:34 +0530

என்றும், தாவா நிலங்கள் சம்பந்தமாக வருட குத்தகையையும், குத்தகை பாக்கியையும் செலுத்த தயாராக இருப்பதாகவும், அசல் வழக்கு முடியும் வரை தாவா நிலங்களை சுவாதீனம் எடுத்து சாகுபடி செய்து நிகர கண்டுமுதலை விற்று நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வழக்கு சொத்துப்பேணுனர் நியமனம் செய்யப்பட வேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.4) வழக்குச் சொத்துப்பேணுநர் நியமனம் என்பது நீதிமன்றத்தின் முழு விருப்புரிமை அதிகாரத்திற்கு உட்பட்டது ஆகும். இவ்வழக்கில் சொத்தின் சுவாதீனம் வாதிவசம் இல்லை. அதேபோல் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதும் அல்ல. 1 முதல் 7 பிரதிவாதிகள் தாவா சொத்தில் சாகுபடி செய்து குத்தகையை தாவா சொத்தின் உரிமையாளரான 8–ஆம் பிரதிவாதி கோவிலுக்கு செலுத்தி வருவதாக 8–ஆம் பிரதிவாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் தாவா சொத்திற்கு வாதி உரிமையற்றவராக இருந்தும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்குரைத்துள்ள நிலையில் தாவா சொத்தின் சுவாதீனத்தை எடுத்து சாகுபடி செய்து விளைச்சலை விற்று வரும் இலாபத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வழக்கு சொத்து பேணுநர் நியமனம் செய்ய கோரிய இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என்று தீர்வு காண்கிறேன்.

6) **இறுதியாக இம்மனுவினை செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறேன்.**

இவ்வுத்தரவு என்னால் கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று (08.04.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.08 16:44:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு.